# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கருப்பாயூரணி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலையில் திருமதி.எம்.உமா மகேஸ்வரி**

கோப்பு எண். **5/2020**

நாள் : **21.10.2020**

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு - முறைப்படுத்துதல் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - கருப்பாயூரணி ஊராட்சி காளிகாப்பான் 2வது பிட் கிராமம் - சர்வேஎண்கள். **51/3A, 51/3B1, 51/3B2, 65/1A, 65/1B** ல் **8514.00** ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் வரன்முறைப்படுத்தி கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் தொடர்பாக

பார்வை 1) உறுப்பினர் செயலர் (பொ) மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மாநகராட்சி அலுவலக வளாகம் 3ம் தளம், அண்ணா மாளிகை, மதுரை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். **401/2020/** ம.தி.2 நாள் : **15.10.2020**

2) திரு.கல்லாணை மற்றும் பலர் கருப்பாயூரணி அவர்கள் செலுத்தி வளர்ச்சிக் கட்டண பல்வகை ரசீது எண். **2206/20/10/2020** கருப்பாயூரணி ஊராட்சி, தொகை ரூபாய். **1,59,350/-**

3) தொடர்புடைய ஆவணங்கள்

---

உத்தரவு :-

பார்வை 1ல் காணும் கடித்ததில், மதுரை உள்ளூர் திட்ட குழும பகுதி, மதுரை கிழக்கு வட்டம், மதுரை கிழக்கு வட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருப்பாயூரணி ஊராட்சி, காளிகாப்பான் 2வது பிட் கிராமம் - சர்வேஎண்கள். **51/3A, 51/3B1, 51/3B2, 65/1A, 65/1B** ல் **8514.00** ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவு, வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு மதுரை நகர் ஊராமைப்பு மூலம் **(In Principally accepted Layout Frame)** ம.வ./ ம.உ.தி.கு.எண். **58/2020** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு நகர் ஊரமைப்பு சட்டம் **1971,** பிரிவு **49** ன் கீழ் கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) மனைப்பிரிவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கான சாலைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை கருப்பாயூரணி ஊராட்சிக்கு தானமாக பத்திரப் பதிவு மனுதாரரால் செய்து கொடுக்கப்பட்டது பூங்கா ஒப்படைப்புக்கு பதிலாக அரசு வழிகாட்டி மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டது.

2. வளர்ச்சிக் கட்டணமாக ஒரு சதுரமீட்டருக்கு ரூ. **25/-** வீதம் ஊராட்சி மன்ற தலைவர், கருப்பாயூரணி ஊராட்சி கணக்கில் ரூ. **1,59,350/-** (ஒரு லட்சத்தி ஐம்பத்தி ஒன்பதாயிரத்தி முன்னூற்றி ஐம்பது) பல்வகை ரசீது எண். **2206/20/10/2020** அன்று செலுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனை

1 **(i)** மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட ம.வ./ ம.உ.தி.கு.எண். **58/2020** என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்

**(ii)** மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறா மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் உள்ளூர் திட்டக் குழுமம் உறுப்பினர் செயலரின் முன் ஒப்புதலின்றி மாற்றம் செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தபடவேண்டும். பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகற்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட வேண்டும் . அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

5. விரிவு அபிவிருத்தித் திட்ட பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகளோ கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தகூடாது

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காடடியுள்ளவாறு கட்ட வரம்பு விடப்பட வேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7மீட்டர் மற்றும் 9மீட்டர் அகலம் வரையிலான சாலைகளுக்கு 1.50 மீட்டரும், 12 மீட்டருக்கு மேல் மற்றும் 15 மீட்டர் அகலத்திற்கு மேலும் 15 மீட்டர் அகலத்திற்கும உட்பட்ட சாலைகளுக்க 4.50 மீட்டரும், 18 மீட்டா மற்றும் அதற்கு மேற்பட்ட அகலம் கொண்ட சாலைகளுக்கு 6.0 மீட்டர் என்ற அளவில் கட்டட வரம்பு விடப்பட்ட வேண்டும். ஊராடசி கட்டட விதிகளின்படி மனையின் எல்லைக்கும், கட்டட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.80 மீ மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின்படி 2.40 மீட்டர் உயரத்திற்கு பெறப்படாத சுற்றுசுவர் அல்லது வேலி தவிர எந்தவித கட்டடமோ சுவரோ கட்டுதல் கூடாது

7. மனையின் பக்க எல்லைக்கும், கட்டத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலமு: குறைந்தது 1.50 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3.0 மீட்டர் திறந்தவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைக்களுக்கு பக்கத் திறந்தவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.50 மீட்டர் விடப்பட வேண்டும். ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும், கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும், வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருந்தல் வேண்டும். இந்த பின்பக்கத் திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், உந்து வண்டி நிறுத்தம் கொட்டகை போன்றை அல்லது அவை போன்ற--குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சாந்த கட்டங்கள் மட்டுமே அமைக்கப்பட்டலாம். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின் பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கும் மேற்படாமலும், மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருந்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் கட்டப்படக்கூடாது. கட்டடம் கட்டாமல் விடப்படும் திற்ந்த வெளியினை தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவு பராமரித்தல் வேண்டும்

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்

11. கடைக்கால் **(Foundation)** போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்துப்பள்ளிகள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் துாரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்

13. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடையவற்றிற்கு தனி அலுவலர் / ஊராட்சி மன்ற தலைவர் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும் மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்

14. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். முனைகளை அதற்குரிய உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்

15. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி **(Ececutive Authority)** யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்படவேண்டும்.

16. **(i)** மேற்படி மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் **(Technical approval)** மட்டுமே வழங்கப்பட்டுள்ளது எனபதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினாரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவேண்டும்

**(ii)** தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவுவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்

**(iii)** மனைப்பிரிவு இடம் 1984 ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1) ன்படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச்சீர்த்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக மனுதாரர் உறுதி அளித்ததன் அடிப்படையில் மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியில் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கப்படுகிறது இதில் குறைபாடுகள் இருப்பின், அதற்கு மனுதாரர் முழு பொறுப்பு

**(iv)** மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது நிர்வாக அதிகாரியின் முன்னிலையில் நடவடிக்கையின் நகலினை இவ்வலுகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்

**(v)** மேலும் மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் **(Land Plan Schedule)** எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதனையும் மனுதாரர் உறுதி அளித்தன் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இதில் குறைபாடுகள் இருப்பின் அதற்கு மனுதாரர் முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும்.

17. மனுதாரர் தனி அலுவலர் / ஊராட்சி மன்ற தலைவர், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கிகரித்த மன்ற தீர்மானம் எண்ணும் நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

18. மனுதாரர் சமர்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

19. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்

267



20. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யவும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

21. ஒப்பதல் அளிக்கப்படட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் **6' X 4'** அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்

22. மனைப்பிரிவின் சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி உள்ளாசட்சி சட்டங்களின்படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்க எடுத்துக் கொள்ளப்படும். மேலும் பொதுப்பாதையிலிருந்து **(Public Road)** மனுதாரர் மனைப்பிரிவு அமையும் மனையிடம் வரை அணுகுசாலையாக காட்டப்பட்டுள்ள சாலை பகுதியை, உள்ளாட்சி தனது பொறுப்பிலம் எடுத்துக்கொள்ளும்

23. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலைகளையும், **OSR** ஒதுக்கீடு இடங்கள் இருப்பில் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப் பத்திரம் நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய் துறை ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்

24. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிட வரன் முறையாகக் கருதப்பட மாட்டாது

25. உள்ளுர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது

26. நகர்ஊரமைப்பு துறை கொள்கை அளவிலான **(In Principle)** ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல. அதே போன்று ஊராட்சியோ, ஊராட்சி ஒன்றியமோ பொருத்தமான அமைப்பு அல்ல. அதனை தககுதியான நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டம்

269



27. சாலையின் இரு புறங்களிலும் 10 அடி துாரத்திற்கு ஒன்றாக மரம் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்

28. மதுரை உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். **401/2020** / ம.தி. 2 நாள் : **15.10.2020** ல் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளையும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்

**வரைபடத்தின் மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | **8514** ச.மீ |
| சாலையின் பரப்பு | **1970** ச.மீ |
| **TANGEGCO** | **35.08 (0.53%)** ச.மீ |
| **lOCAL BADY** | **35.01 (0.52%)** ச.மீ |
| மனையிட பரப்பு | **6474** ச.மீ |

பெறுநர்

M. Uma Maheswari
தலைவர்
கருப்பாயூரணி ஊராட்சி

வி.கல்லாணை மற்றும் பலர்
த-பெ. விருமாண்டித்தேவர்
422, **SLC** டைப், 9வது வடக்கு குறுக்குத் தெரு,
அண்ணாநகர், மதுரை 625 020

நகல்

1. உறுப்பினர் செயலர் (பொ)
   உள்ளூர் திட்டக் குழுமம், மதுரை

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
   மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.அ.விஜயன், பி.இ.,<br>உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ)<br>மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,<br>மதுரை மாவட்டம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணா மாளிகை,<br>மதுரை -625 002,<br>E.mail –ID :dtcpmadurai@gmail.com<br>www.tn.gov.in/dtcp | திரு.கல்லாணை மற்றும் பலர்<br>கதவு எண்.422, SLC Type,<br>4-வது வடக்கு குறுக்கு தெரு,<br>அண்ணா நகர்,<br>மதுரை -20. |
| ந.க.எண்.401/2020/மதி2. | நாள்.15.10.2020. |

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** மனைப்பிரிவு - மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி - மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு வட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - கருப்பாயூரணி ஊராட்சி, காளிகாப்பான் 2-வது பிட் கிராமம் - சர்வே எண்கள்-51/3A, 3B1, 3B2, 65/1A & 1B -ல் 8514.00சமீ பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டது விபரம் தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை :**

1) மனுதாரர்கள் திரு.கல்லாணை மற்றும் பலர் என்பவர்களது விண்ணப்பம் பதிவு எண்.3389 நாள்.04.02.2020. பெறப்பட்டது- 06.02.2020.
2) மனுதாரர்கள் திரு.கல்லாணை மற்றும் பலர் என்பவர்களது விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள்.06.02.2020, 01.07.2020, 13.08.2020, 10.09.2020, 16.09.2020 மற்றும் 05.10.2020.
3) வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.), மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், அவர்களின் கடிதம் ந.க.எண்.515/20/தி3, நாள்.05.02.2020.
4) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
5) மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.63/2020, நாள்.15.02.2020.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
7) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
8) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
9) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடித ந.க.எண்.402/2020/மதி2, நாள்.10.02.2020, 06.06.2020, 04.08.2020, 20.08.2020 மற்றும் 21.09.2020.
10) சார்பதிவாளர், தெப்பக்குளம் அவர்களின் கடிதம் ந.க.எண்-49/2020, நாள்-12.08.2020.
11) ஊராட்சி மன்றத் தலைவர், கருப்பாயூரணி ஊராட்சி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் பெறப்பட்ட, நாள்.16.09.2020.
12) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் உள்ளாட்சி பொது உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண்.2277/2020, நாள்-15.06.2020.

13) மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு TANGEDCO உபயோகம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆவண எண்.2276/2020, நாள்.15.06.2020.
14) மனுதாரர்கள் திரு.கல்லாணை மற்றும் பலர் என்பவர்களது கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள்.01.10.2020.
15) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இதே எண். மற்றும் நாள். 15.10.2020. (ம.வ/ம.உ.திகு எண்.58/2020).

-------

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை(15)-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதம் மூலம் திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் உத்தரவு உள்ளாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மனைப்பிரிவு இறுதி ஒப்புதலுக்காக செயல் அதிகாரி/ஊராட்சி மன்றத் தலைவர், கருப்பாயூரணி ஊராட்சி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

15/10/2020

உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

15/10/20 15/10/2020.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate